**IN THE COURT OF SPECIAL COURT FOR**

**TRIAL OF CASES UNDER SC/ST (POA) ACT, TIRUVANNAMALAI.**

**SPECIAL SESSIONS CASE NO. 19 OF 2022**

**Deposition of Witness for : PW-1 (LW-1)**

| | | |
|---|---|---|
| **Name** | : | திருமதி.சவிதா |
| **Father's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 07-07-2026**

Accused present.

**முதல் விசாரணை –**

நான் தற்போது செய்யாரில் நகரசார் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன் . நான் இதற்கு முன்பு வந்தவாசி வட்டசார் ஆய்வாளராக பணிபுரிந்தேன். நான் அக்டோபர் 2017 லிருந்து ஆகஸ்ட் 2021 வரை செய்யாரில் வட்டசார் ஆய்வாளராக பணியில் இருந்தேன். அப்போது மார்ச் மாதம் 2021 ல் ஸ்ரீபதி என்பவர் எருமைவெட்டி என்ற கிராமத்தில் சர்வே எண் . 87/9A வில் பரப்பு திருத்தம் செய்து தரும்படி சிஎம் செல்லுக்கு ஆன்லைனில் மனு அனுப்பியிருந்தார் . பரப்பளவு திருத்ததிற்கும் , வட்டசார் ஆய்வாளருக்கும் எந்த சம்மந்தமும் இல்லை . சர்வேயர் பீல்டை அளந்து அறிக்கை கொடுப்பார்கள். வட்ட முதுநிலை வரைவாளர் , வட்ட துணை ஆய்வாளர் அதை பரிசீலனை செய்து மேல்முறையீட்டுக்கு அனுப்புவார்கள் . இதில் வட்டசார் ஆய்வாளரின் பங்கு எதுவும் இல்லை. இருப்பினும் நான் பட்டியல் இனத்தை சேர்ந்தவர்

என்பதால் என்னை அச்சுருத்தும் வகையில் நான்தான் தடுப்பதாக சொல்லி தொடர்ந்து மனு கொடுத்து வருகிறார் . மற்ற மூவரும் வேறு இனத்தை சேர்ந்தவர்கள் என்பதால் அவர்களை எதுவும் கேட்பதில்லை . எதிரி அனுப்பும் மனுக்களில் எல்லாம் என்னை கேவலப்படுத்தும் வகையில் முதல்நிலை குற்றவாளி என்றும் , ஆள்மாராட்டம் செய்து பாஸ் செய்துள்ளரா , வேலை செய்ய தெரியுமா என்று குறிப்பிட்டு மனுக்களை அனுப்புகிறார். கடைசியாக அனுப்பிய மனுவில் நான் விபச்சார தொழில் செய்வதாக குறிப்பிட்டு அனுப்பியுள்ளார் . எல்லா மனுக்களிலும் ஒரு நகலை எனக்கு அனுப்பியுள்ளார். எனக்கு கணவர் இல்லை, ஒரு மகள் மட்டும் உள்ளார். எங்களுடைய பாதுக்காப்பிற்காக நான் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படுவது நான் கொடுத்த புகார்தான். **புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** நான் எந்த அலுவலகத்திற்கு சென்றாலும் என்னை அச்சுருத்தும் வகையில் வந்து பார்ப்பது , மனு அனுப்புவது என்று எதிரி இருக்கிறார். என் மீது AD, RDD ஆகிய அலுவலகங்களில் புகார் கொடுத்துள்ளார். அனக்காவூர் காவல் நிலையத்திலும் என் மீது புகார் கொடுத்துள்ளார் . எல்லா இடங்களிலும் நான் ஆஜராகி பதில் கொடுத்துள்ளேன் . இது தொடர்பாக டிஎஸ்பி என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–</u>

புகாரை நான் நேரடியாக கொடுத்தேனா, தபால் மூலம் அனுப்பினேனா என்றால் நேரடியாக 21.12.2021 ல் கொடுத்தேன் . நான் புகார் கொடுத்தவுடன் காவல் கண்காணிப்பாளர் என்னை விசாரித்தாரா என்றால் அவர் அதை டிஎஸ்பிக்கு அனுப்பிவிட்டார். இந்த வழக்கு தொடர்பாக டிஎஸ்பி என்று எங்குவைத்து என்னை விசாரித்தார் என்றால் டிஎஸ்பி அலுவலகத்தில் விசாரித்தார் , தேதி தெரியவில்லை 12 மாதத்திலேயே விசாரித்தார் . அதற்கு பின்னிட்டு வேறு எப்போதாவது விசாரித்தாரா என்றால் இல்லை . என்னை விசாரித்தபொழுது என்னுடன் பணிபுரிந்தவர்கள் யாரையாவது விசாரித்தாரா என்றால் தெரியவில்லை. பரப்பு திருத்தம் சம்மந்தமாக எதிரி இணையவழி மூலமாக தான் மனு கொடுத்துள்ளார் என்றால் சரிதான் . அந்த மனுவை யார் விசாரிப்பார்கள் என்றால் சம்மந்தப்பட்ட குறுவட்ட அளவர் . அவர் அளவீடு செய்துவிட்டு அறிக்கையை வட்ட துணை ஆய்வாளருக்கு வழங்குவார் என்றால் சரிதான். வீராசாமி என்பவர் என்ன பணியில் இருக்கிறார் என்றால் அவர் வட்ட முதுநிலை வரைவாளர் . மீரா என்பவர் சரியாக உள்ளதா என்று பார்க்க வீராசாமியிடம்

அதை கொடுத்தார் என்றால் அவர் அதை சரிப்பார்த்து வட்டதுணை ஆய்வாளருக்கு அனுப்புவார். வட்ட துணை ஆய்வாளர் அவர் பெற்றவுடன் அதை பார்க்கும்படி என்னிடம் சொன்னார் என்றால் இல்லை . வட்ட துணை ஆய்வாளர் என்னிடம் கொடுப்பார் , நான் அதை சரிப்பார்த்து வட்ட துணை ஆய்வாளரிடம் மீண்டும் கொடுத்த பிறகுதான் அவர் அதை வட்டாட்சியருக்கு அனுப்புவார் என்றால் இல்லை . நான் அந்த அறிக்கையை பார்த்து கையெழுத்து போட்டுள்ளேன் என்று சொன்னால் இல்லை . பொதுமக்களுக்கு ஒரு அலுவலகத்தில் வேலை செய்பவர்கள் என்ன ஜாதி என்பது தெரியாது என்றால் அவர்கள் விசாரித்துவிட்டுதான் வருகிறார்கள் . பொதுமக்களுக்கு யார் என்ன ஜாதி என்பது தெரியாது என்றும் , நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல . 27.04.2021 ல் எதிரி எங்கள் அலுவலகத்திற்கு வந்து லிங்கமூர்த்தி என்பவரிடம் அவரது மனு என்ன ஆனது என்பது குறித்து கேட்டுக்கொண்டிருந்தார் என்றும், அப்போது நான் தன்னிச்சையாக அது என்னுடைய வேலை கிடையாது , ஏன் என்னிடம் கேட்கிறீர்கள் என்று சொன்னேன் என்று சொன்னால் இல்லை . என்னுடைய வேலை கிடையாது எனக்கும் ஆட்கள் இருக்கிறார்கள் தொலைத்துவிடுவேன் என்று மிரட்டினேன் என்று சொன்னால் சரியல்ல. லிங்கமூர்த்தி என்னை என்னுடைய சீட்டுக்குஅனுப்பிவிட்டு எதிரியிடம் அவருடைய மனுவின்மீது பரிசீலித்து நடவடிக்கை எடுப்பதாக கூறி அனுப்பிவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. அன்றைய தினமே மாலை எதிரி அவருடைய ஊருக்கு செல்வதற்காக சென்றபொழுது நான் சாண்டில்யன் என்பவரை வைத்து அவரை மிரட்டினேன் என்று சொன்னால் சரியல்ல . இந்த வழக்கின் புகாரை கொடுப்பதற்கு முன்பு எதிரியின் மீது நான் வேறு ஏதாவது புகார் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை . நான் எதிரியின் மீது 23.09.2021 அன்று காவல் ஆய்வாளர் அலுவலகத்தில் புகார் கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சாட்சி மேற்படி புகார் நகலை பார்த்துவிட்டு அதை அவர் கொடுக்கவில்லை என்றும் , அதிலுள்ள கையெழுத்து அவருடையது இல்லை என்று சாட்சியம் அளித்தார் . நான் கைப்படதான் எழுதிக்கொடுத்தேன் , டைப்செய்து எந்த புகாரையும் கொடுக்கவில்லை . டிஎஸ்பி விசாரித்தபொழுது எதிரி என்மீது அனுப்பிய மனுக்களை எல்லாம் அவரிடம் கொடுத்தேனா என்றால் வந்தவாசியில் இருந்தபொழுது அனுப்பிய மனுவை கொடுத்தேன் . பரப்பளவு திருத்தம் செய்வது என்னுடைய வேலைதான் என்று சொன்னால் இல்லை . தகவல் அறியும்

உரிமை சட்டத்தில் கோரியபொழுது என்னுடைய உயர் அதிகாரிகள் பரப்பளவு திருத்தம் செய்வது என்னுடைய பணிதான் என்று குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் சரியல்ல . என்னிடம் காட்டப்படும் சிட்டா நகல்களில் உள்ள கையெழுத்து என்னுடையததான் , உண்மை நகல் என்று கையொப்பம் செய்து தரும்படி வட்ட துணை ஆய்வாளர் சொன்னார். **சிட்டா நகல்கள் எ.த.சா.ஆ 1 முதல் 3 ஆக குறியீடு செய்யப்படுகிறது** . என்னுடைய வேலை என்பதால்தான் உண்மை நகல் என்று கையொப்பம் செய்து கொடுத்துள்ளேன் என்றால் பரிசீலனை செய்ததற்காக நான் கையொப்பம் செய்து கொடுக்கவில்லை, பிரிண்ட் அவுட் எடுத்ததில் உண்மை நகல் என்று கையொப்பம் செய்துள்ளேன். வட்டாட்சியரிடம் எதிரி என் மீது மனு தாக்கல் செய்துள்ள விவரங்களை கோரியபொழுது அவர் அதுபோல் எந்த மனுவும் வரவில்லை என்று தகவல் தெரிவித்துள்ளார் என்றால் சரியல்ல . அவருக்கும் ஒரு நகல் அனுப்பிவிட்டுதான் எனக்கு அனுப்புகிறார் . திருவண்ணாமலை நிலஅளவை பதிவேட்டு துறையில் ஆஜராகி நானும் , எதிரியும் பதில் கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். சென்னை சேப்பாக்கத்தில் உள்ள மண்ட இணை இயக்குனர் அலுவலகத்திலும் எதிரி மேல் முறையீடு செய்துள்ளார் என்றால் சரிதான் . அந்த அலுவலகத்திலும் ஆஜராகி நான் பதில் கொடுத்துவிட்டேன் . துறை ரீதியாக என் மீது நடவடிக்கை எடுப்பார்கள் என்பதால்தான் எதிரியின் மீது காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் புகார் கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல . தகவல் அறியும் உரிமைச்சட்டத்தில் கேட்டததில் என் மீது உள்ள விசாரணை முடிவடையவில்லை நிலுவையில் தான் உள்ளதாக தெரிவித்துள்ளார்கள் என்றால் விசாரணை எதுவும் நிலுவையில் இல்லை . நான் ஏற்கனவே எதிரியின் மீது கொடுத்த புகார் உண்மையில்லை என்று அதை முடித்துவிட்டார்கள் என்றும் , அதனால்தான் நான் எதிரியின் மீது மீண்டும் புகார் கொடுத்துள்ளேன் என்று சொன்னால் இல்லை. முதல் புகாரை நான் சரியாக கொடுக்கவில்லை என்பதால் இரண்டாவது புகாரை மனுக்களை நானே தயார் செய்துக்கொண்டு புகார் கொடுத்துள்ளேன் என்று சொன்னால் இல்லை . பரப்பளவு திருத்தும் பணியில் எனக்கும் வேலை உள்ளது என்றும் , நான் தற்போது இல்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல . நான் எதிரி கொடுத்த மனுமீது எந்த நடவடிக்கையும் எடுக்காததால் அவர் தொடர்ந்து வந்து

**கேட்பதால் எதிரியின் மீது நான் பொய்யாக இந்த புகாரை கொடுத்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.**

**மறுவிசாரணை–** இல்லை

Deposition of Witness recorded in computer under my dictation to Typist in Open court and read over to the witness and acknowledged by him /her as correct.

V SUTHA

Digitally signed by V SUTHA
Date: 2026.07.07 18:46:17 +0530

**SESSIONS JUDGE,**
**SPECIAL COURT FOR TRIAL OF CASES UNDER SC/ST (POA) ACT**
**TIRUVANNAMALAI.**